**தலைப்பு 212 – பரீட்சைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன பரீட்சைகள் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 212 – பரீட்சைகள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 16 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பரீட்சைகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. | பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்படாமை / போதியளவில் திட்டமிடப்படாமை. | 2.2 |
| | | 2. | பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச்சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.6 |
| | | 3. | கட்டுநிதி மதிப்பீடு தயாரிப்பதில் குறைபாடுகள் | 2.9 |
| | | 4. | செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் | 2.1 |
| | | 5. | பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்துவதில் குறைபாடுகள் | 2.2 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன என்பதும் | இணக்கமின்மைகள் | 2.10 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | வருமானக் கணக்குகளிலான குறைபாடுகள் | 2.7 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைபாடுகள் | 2.3 |
| 128(1)(ஊ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதெனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்கு படுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் நிலுவைக் கடன் மீதிகளை அறவிடல் | 2.8 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும் | எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டம் பெற்றுக் கொள்ளப்படாமை | 2.5 |
| 128(1)(ஓ) | செலவிடப்பட்ட ஏதேனும் செலவினமொன்று அல்லது பொறுப்பொன்று கடப்பாடொன்றாக இருந்த போதிலும், தமது செலவின விடயப் பரப்பு அல்லது எல்லைகள் அல்லது ஏனைய அதிகார வழங்கப்பட்ட நிதிஏற்பாடு ஒன்றிற்குள் வருமாறும் அது போதியளவு அதிகாரம் பெற்றுள்ளதெனவும் | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் | 2.4 |
| **நிதிப்பிரமாணம் 128(2) - அரச வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிக்கும் பொறுப்புக்கள்** | | | |
| 128(2)(ஆ) | ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் நி.பி.151 இன் பிரகாரம் ஓர் அரசிறைக் கணக்கு தயாரிக்கப்படுகின்றது என்பதையும் | வருமானங்கள் முறைப்படி இனங்காணப்படாமை. | 2.7(அ) |
| 128(2)(உ) | அரச வருமானங்கள் சேகரிப்பது தொடர்பாக செயற்படும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடனும் அவற்றைச் திணைக்களங்களுடனும் விசாரித்து அரசிற்கு வருமதியாக உள்ள நிலுவையாகவுள்ள அரசிறையை விரைவில் சேகரிப்பதன் பொருட்டு விசேட ஒழுங்குகள் செய்யப்படுகின்றன என்பதையும் | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. | 2.7(ஆ) |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

**பணிப்பொறுப்புகளை நிறைவேற்றாமை**

**செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள் - புதிய பல்நோக்கு கட்டிடத்தினை நிர்மாணித்தல்**

2011 ஆம் ஆண்டின் போது கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் எழுந்த சிக்கல்களை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆர்வலர் குழுவின் முன்மொழிவொன்றாக இந்த கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தினால் ஆட்சேர்ப்பு செய்தல், பதவியுயர்வு வழங்குதல், வினைத்திறமைகாண்

தடைப்பரீட்சை போன்ற 300 நிறுவன பரீட்சைகளை நடாத்துவதற்கு மற்றும் மதிப்பீடு செய்தல் போன்றவற்றுக்காக பாடசாலைகளை மூடுவதற்கு நேர்கின்றமையை தவிர்த்தல், வினாத்தாள்களை சேகரித்தல் ஆகியவற்றை பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 425 கன அடி கொண்ட நிலப்பரப்பில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த ஆறு மாடிக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 564,320,835 தொகைக்கு (வற் உள்ளடங்கலாக) கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய 02/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கமைய அரச துறையின் பணிகள் மற்றும் சேவைகளுக்கான கிரய மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது அனைத்து விடயங்களையும் கவனத்திற் கொண்டு முடியுமான அளவில் சரியான மொத்த கிரய மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு அரச நிறுவனங்கள் பொறுப்புக்கூற வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பரீட்சைகள் திணைக்களத்தின் இந்த ஆறு மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக கிரய மதிப்பீடுகள் தயாரிக்கப்படாது எடுகோளாக்கப்பட்ட ரூபா 280 மில்லியன் கிரயமொன்று அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளுக்களை துரிதமாக மேற்கொள்ளும் நோக்குடன் விலைக்கேள்வி கோரப்படாது ரூபா 280 மில்லியன் கிரயத்தில் நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு 2012 மார்ச் 22 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், கட்டிடத்திற்காக கிரய மதிப்பீடுகளோ அல்லது திட்டமோ தயாரிக்கப்படாது, அமைச்சரவைக்கு சரியான தகவல்களை முன்வைக்காது இந்த அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2013 ஆகஸ்ட் 05 ஆந் திகதிய 17/01/04/2012/21 ஆம் இலக்க கடிதத்தில் கிரய பரிசீலனை குழு கிரய விலகல் பந்திகளை குறிப்பிட்டு அறிக்கையொன்றினை தயாரித்திருந்த போதிலும், அரசாங்க நிதித் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 05 ஆந் திகதி PFD/MD/104/1/2/23 ஆம் இலக்க அரச நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கமைய ஒப்பீட்டு ரீதியான வெளியீடொன்று கிரய மதிப்பீட்டு பரிசீலனை குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்ததுடன் ஆரம்ப கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக ஒப்பீட்டு ரீதியான அறிக்கையொன்றினை தயாரிப்பதற்கு திணைக்களத்திற்கு இயலாது போயிருந்தது.

(ஈ) 2015 ஆம் ஆண்டிலும் பல்நோக்கு கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன், அமைச்சரவையின் 04 ஆம் பிரமாணக் குறிப்பும் தயாரிக்கப்பட்டு, அதனூடாக ரூபா 615 மில்லியன் தொகையான மொத்தக் கிரய மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டு, 2015 யூலை 23 ஆந் திகதிய அமப/15/1000/628/014 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அது அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 09 ஆந் திகதிய 1/1/CG/Ex ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்பந்தம் கையளித்தல் மற்றும் உடன்படிக்கை கைச்சாத்திடல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்று 16 மாதங்களின் பின்னர் அந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) திறந்த விலைக்கேள்வி கோரும் நடைமுறையை பின்பற்றுவதற்கு அதிக காலம் எடுக்கின்றமையால் விலைக்கேள்வி கோரப்படாமல் நிர்மாணப் பணிகள் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கும், மதியுரை சேவைகள் பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய உசாத்துணை பணியகத்திற்கும் கையளிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெறுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன், இவ்வாறான திறந்த அடிப்படையிலான கேள்வி கோரப்படாமல் ஒப்பந்தம் நேரடியாக கையளிக்கப்பட்டமைக்கான காரணம் கட்டிடத்தின் பணிகளை

துரிதமாக பூர்த்தி செய்தலே எனினும், கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை நடைமுறை நிலைமைக்கு கொண்டு வருவதற்கு சுமார் 05 வருட காலம் கடந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2012 திசெம்பர் 11 ஆந் திகதிய 17/01/4/2012/09 ஆம் இலக்க அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு முகவரியிடப்பட்டிருந்த கடிதத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் நிர்மாணிப்பதற்கு தேவையான நிலத்திற்காக அளவையியலாளர் வரைபொன்று (Plan) தயாரிப்பதற்காக 2012 திசெம்பர் 28 ஆந் திகதி தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 68,544 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவ்வாறானதொரு வரைபொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) திணைக்களத்தால் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் மண் பற்றிய பரிசோதனையொன்றை மேற்கொண்டு, அறிக்கையொன்றினை பெற்றுக்கொள்வதற்காக 2013 யூலை 08 ஆந் திகதி அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட தனியார் நிறுவனமொன்றிடமிருந்து அறிக்கையொன்றினை பெற்றுக்கொண்டு 2013 செப்தெம்பர் 13 ஆந் திகதி ரூபா 161,375 செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் அந்த அறிக்கையில் தரவுகள் போதுமானதாக இல்லாதிருந்தமையால் மீண்டும் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பிடம் அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டு 2016 பெப்ரவரி 24 ஆந் திகதி ரூபா 419,663 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், திணைக்களமானது உரிய திட்டமொன்றின்றி செயற்பட்டமையால், ஒரே பணிக்காக இரு தடவைகள் கொடுப்பனவு மேற்கொள்ள நேர்ந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான கடுவல நகரசபையில் ஒரு வருட காலப்பகுதிக்காக வழங்கப்பட்டிருந்த 2016 ஏப்ரல் 07 ஆந் திகதிய B/BB/886/15 ஆம் இலக்க அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியான காலப்பகுதி 2017 ஏப்ரல் 07 ஆந் திகதி நிறைவடைந்திருந்த போதிலும், அந்த அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியான காலத்தினை நீடிப்பு செய்தமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஐ) திணைக்களம் ஆறு மாடிக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை 2017 மார்ச் 07 ஆந் திகதி ஆரம்பித்திருந்த போதிலும், மேற்கொள்ளப்பட வேண்டிய நிர்மாணப் பணிகள் மற்றும் அந்தப் பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதிகள் உள்ளடங்கலான நிகழச்சித்திட்டத்தினை சமர்ப்பிப்பதற்கு நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தினால் 10 மாத காலத்தின் பின்னர் 2018 சனவரி மாதம் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஒ) திணைக்களத்தின் வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டவாறு காணப்படும் கட்டிடத்தின் கட்டிட நிர்மாண நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தளத்தின் தூண்கள், பீம், ஸ்லெப், படிகள் மற்றும் கொத்தனார் பணிகளும் முதலாம் மற்றும் இரண்டாம் தளங்களின் தூண்கள், பீம், ஸ்லெப், படிகள் மூன்றாம் தளத்தின் தூண்கள் போன்ற பகுதிகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் தரைத் தளத்தின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2017 ஏப்ரல் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையான 09 மாத காலப்பகுதியினுள் வேலை செய்யக்கூடிய 275 மனித நாட்கள் இருந்த போதிலும், நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தின் செயற்திட்ட முகாமையாளர், தள முகாமையாளர், செயற்திட்ட பொறியியலாளர் உள்ளடங்கலான உத்தியோகத்தர்கள் பகல் மற்றும் இரவு

பணிக்கு வருகை தந்த மொத்த நாட்களின் எண்ணிக்கை மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டதுடன், செயற்திட்டத்தின் உரிய காலப்பகுதியினுள் செய்து முடிக்க வேண்டிய வேலைப்பகுதிகளை நிறைவு செய்ய முடியாமைக்கு இந்த நிலைமையும் காரணமாக அமைந்திருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஔ) கட்டிடத்தின் நிர்மாண செயல்முன்னேற்றத்தினை மீளாய்வு செய்யும் கூட்டத்திற்காக நிர்மாண பணிகளை மேற்கொள்ளும் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் மதியுரையாளர்களான பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய உசாத்துணைப் பணியகத்தின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்ததுடன், அதன் போது நிர்மாண முன்னேற்றம் தொடர்பில் கலந்துரையாடல் மேற்கொள்வதற்கு 2017 சனவரி முதல் 2018 சனவரி வரை 22 கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. இந்தக் கூட்டங்களுக்கு நிர்மாண நிறுவனங்களுக்காக முகாமையாளர் (நிர்மாண) 13 கூட்டத் தடவைகளிலும் சிரேஷ்ட செயற்திட்ட முகாமையாளர் 09 கூட்டத் தடவைகளிலும் பங்குபற்றியிராததுடன், நிர்மாண செயன்முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை அண்மித்தல் தாமதமடைதற்கு கூட்டங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களின் பங்குபற்றல் குறைவடைந்தமை தாக்கமளித்துள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(க) கட்டிடத்திற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி நிர்மாணப் பணிகளுக்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 54,949,803 மற்றும் மதியுரைக்காக பொறியில் பணிகள் தொடர்பான மத்திய உசாத்துணை பணியகத்திற்கு ரூபா 9,033,580 தொகை உள்ளடங்கலாக ரூபா 63,983,383 கூட்டுத்தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன், நிர்மாணப் பணிகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட தினங்கள் உள்ளடக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கமைய பௌதீக செயன்முன்னேற்றம் 26 சதவீதமான அளவினை கொண்டிருக்க வேண்டிய போதிலும், உள்ளபடியான செயன்முன்னேற்றம் 12 சதவீதம் என்பது செயன்முன்னேற்ற அறிக்கைகளுக்கமைய அவதானிக்கப்பட்டது.

## 2.2 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

---

**இரகசியத்தன்மை வாய்ந்த பதிவேடுகளின் போக்குவரத்திற்காக வாடகை அடிப்படையில் பேருந்துகள் மற்றும் லொறிகளை பெற்றுக்கொள்ளும் பெறுகைகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) ரூபா 15,000,000 மதிப்பீட்டுப் பெறுமதியுடைய இரகசியத்தன்மை வாய்ந்த ஆவணங்களின் போக்குவரத்திற்காக வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக்கொள்வதற்குரிய பெறுகைகள் 2017 ஆம் ஆண்டின் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.11 ஆம் வழிகாட்டிக்கமைய தேசிய அடிப்படையிலான போட்டி விலைக்கேள்வி கோரும் நடைமுறையில் பங்குபற்றும் அனைத்து விலைக்கேள்வியாளர்களிலும், உரிய மாதிரிப் படிவத்திற்கமைய கேள்விக் காப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிறுவனத்தினால் கேள்விக் காப்பீடொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பெறுகை நிபந்தனைகளின் பிரகாரம், இரகசியத்தன்மை வாய்ந்த ஆவணங்களை போக்குவரத்து செய்வதற்காக ஈடுபடுத்தப்படும் லொறிகளின் ஓட்டமானிகள் செயற்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த பணிக்காக ஈடுபடுத்திய வாகனங்களின் ஓட்டமானிகள் செயலிழந்து காணப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஈ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.10 வழிகாட்டிக்கமைய கேள்வி கோரல் ஆவணங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள கால எல்லைகளுக்காக செல்லுபடியான கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென விலைக்கேள்வியாளர்களுக்கு அறிவிக்க வேண்டிய போதிலும், விலைக்கேள்வி கோரல் ஆவணங்களில் விலைக்கேள்வியின் செல்லுபடிக்காலம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(உ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.2.1 வழிகாட்டிக்கமைய விலைக்கேள்வியை தயார்ப்படுத்துவதற்காக விலைக்கேள்வியாளர் ஒருவருக்கு தேவையான அனைத்து தகவல்களும் விலைக்கேள்வி கோரல் ஆவணங்களில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், கூறுவிலைகளை சமர்ப்பிப்பதற்குரிய அறிவுறுத்தல்கள் பெறுகை அறிவித்தலில் போதியளவு தெளிவானதாக முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிறுவனத்தினால் இரகசியத்தன்மை வாய்ந்த ஆவணங்களின் போக்குவரத்திற்காக விலைக்கேள்வியாளருடன் 2016 நவம்பர் 16 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையில் ஒவ்வொரு தரப்பினருக்காகவும் சாட்சியாக இருவர் வீதம் கையொப்பமிட வேண்டிய போதிலும், லொறிகளுக்கான உடன்படிக்கையின் இரு தரப்பினரும் பேரூந்து உடன்படிக்கையின் பரீட்சைகள் திணைக்கள தரப்பின் சாட்சிக் கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை.

(எ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.1(அ)(ஆ) வழிகாட்டிகளுக்கமைய தேசிய பெறுகைகள் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனத்தினூடாக அங்கீகரிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்கேள்வி கோரல் பதிவேடொன்று விலைக்கேள்வி தரவு பத்திரம் மற்றும் விசேட நிபந்தனைகளுக்கு ஆகக்குறைந்த மாற்றங்களுடன் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும், இந்த பெறுகைக்காக பயன்படுத்தப்பட்டுள்ள விலைக்கேள்வி கோரல் ஆவணங்கள், அங்கீகரிக்கப்பட்ட விலைக்கேள்வி கோரல் ஆவணங்களுடன் இணங்கவில்லை.

(ஏ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.18 வழிகாட்டிக்கமைய வற் வரியினை தனித்தனியாக குறிப்பிடுமாறு விலைக்கேள்வியாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டிய போதிலும், இந்த கொள்வனவின் போது விலைக்கேள்வியாளர்கள் சமர்ப்பித்திருந்த கூறுவிலைகள் பெறுமதி சேர் வரியுடனானதா இல்லையா என்பது குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ஏதேனுமொரு விதிக்கப்பட்ட கட்டணமொன்றை செலுத்துவதன் அடிப்படையில் தகுதிவாய்ந்த விலைக்கேள்வியாளர்களுக்கு விலைக்கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கு இடமளிக்கப்பட வேண்டியதுடன், அரச நிதிச் சுற்றறிக்கை 6/2016 இன் பிரகாரம் ரூபா 15,000,000 பெறுமதியான இந்த கொள்வனவிற்காக மீளச் செலுத்தப்படாத வைப்புக்களாக ரூபா 3,500 முதல் ரூபா 12,500 இடைப்பட்ட தொகையொன்று அறவிடப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தினால் இதற்காக ரூபா 1,000 தொகையான மீள செலுத்தப்படாத வைப்பொன்று அறவிடப்பட்டிருந்தது.

(ஒ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.9.1 வழிகாட்டிக்கமைய பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளும் போது அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவினை கவனத்திற் கொள்ளாது ரூபா 10,250 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

நடைமுறையல்லா சொத்துக்களின் அசைவு அறிக்கையினுள் காணியாக ரூபா 630,000,000 தொகையான பெறுமதி குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிறுவனத்தின் காணியை திணைக்களத்திற்கு சுவீகரிப்பதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 கடமைகள் மற்றும் பொறுப்புகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒதுக்கீட்டுக் கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள டீ.ஜீ.எஸ்.ஏ 8(i) கடப்பாடுகள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 60,162,351 தொகையான கடப்பாடுகள் மற்றும் டீ.ஜீ.எஸ்.ஏ 8(ii) பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 9,176,144 தொகையான பொறுப்புக்களும் திணைக்களத்தின் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கு இணங்காத வகையில் 06 வேலை விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 127.4 மில்லியன் தொகையான நிதியேற்பாடு ரூபா 8.2 மில்லியனால் மிகைத்து ரூபா 9.6 மில்லியன் தொகையான கடப்பபாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.

(இ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பொறுப்புக்கள் ரூபா 12,975,360 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.5 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிறுவனத்தின் பரீட்சைகளுக்காக பரிசோதகர்களை தெரிவு செய்யும் நடைமுறை மற்றும் அதன் சுவாதீனத்துவம்**

அரச துறையின் நிறுவன பரீட்சைகளை நடாத்தும் பிரதான மற்றும் ஒரே நிறுவனம் பரீட்சை திணைக்களமாவதுடன் பல்தேர்வு மற்றும் ஏனைய வினாத்தாள்களை திருத்துவதற்காக பரிசோதகர்கள் இணைத்துக் கொள்ளல் மற்றும் சேவையில் ஈடுபடுத்தல் தொடர்பில் முறையான நடைமுறையொன்று அல்லது தெரிவு செய்யப்பட்ட பரிசோதகர்களுக்கு வழங்கப்படும் பரீட்சைகளின் அளவு மற்றும் வினாத்தாள்களின் எண்ணிக்கையை தீர்மானிப்பதற்கான குறித்துரைக்கப்பட்ட அடிப்படையொன்று, எழுத்துமூலமான அளவீடுகள் அல்லது கொள்கைரீதியான தீர்மானமொன்று திணைக்களத்தினுள் இல்லாதிருந்தது.

**(ஆ) நிறுவன பரீட்சைகளின் வினாத்தாள்களை திருத்தும் பணிகளின் சுவாதீனத்துவம்**

(i) மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைக்கு தொடர்புடைய 2017 சனவரி முதல் 2017 யூன் 30 வரையான 16 பரீட்சைகளின் பல்தேர்வு வினாத்தாள்களின் திருத்தப் பணிகளில் ஈடுபடுத்திய பரிசோதகர்களில் பெரும்பாலானோர் திணைக்கள ஆணையாளர், பிரதி ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளர்களாக இருந்ததுடன், 64,002 வினாத்தாள்களுக்காக ரூபா 6,111,560 கூட்டுத்தொகையான படிகள் அவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. உரிய பதவியில் நிலவும் பொறுப்புக்கு மேலதிகமாக திருத்தும் பணிகளை மேற்கொள்ளும் போது வினாத்தாள்களை திருத்துவதன் தரம் தொடர்பான

சிக்கல்கள் ஏற்படக்கூடுமென்பதை கணக்காய்வின் போது தவிர்க்க முடியாதிருந்தது.

(ii) நிறுவனத்தின் 06 பரீட்சைகளின் பல்தேர்வு வினாக்களை திருத்துவதற்காக பதிவு செய்துள்ள உத்தியோகத்தர்களின் பெரும்பாலானோர், அதாவது 191 பேர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களாவதுடன், வினாத்தாள் பரிசோதகர்களை காலரீதியில் மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிறுவன பரீட்சைகளுக்காக வினாத்தாள்கைள தயாரித்தல் மற்றும் மொழிபெயர்ப்பு செய்தல்**

---

2017 சனவரி முதல் யூன் வரையிலும் 70 நிறுவன பரீட்சைகளை நடாத்துவதற்கு வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 14 சந்தர்ப்பங்களில் ஆணையாளர் (நிதி) நிதிப்பிரமாணம் தொடர்பான வினாத்தாள்களை தயாரித்திருந்தார். திணைக்களத்தின் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரால் தயாரிக்கப்படுவதால் பரீட்சை வினாத்தாள்கள் தொடர்பில் காணப்படும் சுவாதீனத்துவம், இரகசியத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை தொடர்பில் கணக்காய்விற்கு சிக்கலுக்குரியதாக இருந்தது.

**(ஈ) நிறுவக பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் ஆட்சேர்த்தல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 ஏப்ரல் மாதம் இடம்பெற்ற இலங்கை கணக்காளர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப் பரீட்சைக்காக திணைக்களத்தினால் ரூபா 9,070,053 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பரீட்சையில் இடம்பெற்ற முறைகேடுகள் காரணமாக பரீட்சை இரத்துச் செய்யப்பட்டு 2018 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் அதனை மீண்டும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii) பரீட்சைகள் தரவு உதவியாளர் பதவியின் 43 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2016 ஏப்ரல் மாதத்தின் போது நடாத்தப்பட்ட எழுத்துமூலப் பரீட்சைக்கு 1,762 விண்ணப்பதாரர்கள் தோற்றியிருந்தனர். அதில் சித்தியடைந்த 89 பேருக்கான பிரயோகப் பரீட்சையில் 77 பேர் சித்தியடைந்திருந்ததுடன், தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சையில் 40 புள்ளிகளைப் பெற்ற 43 விண்ணப்பதாரர்கள் பதவிகளுக்கான தகைமைகளை பெற்றிருந்தனர். இந்த பரீட்சை மற்றும் நேர்முக தேர்விற்காக ரூபா 714,241 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இறுதியாக 06 வெற்றிடங்களுக்காக மாத்திரம் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(iii) திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2017 பெப்ரவரி மாதம் ரூபா 16,360 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டு 52 விண்ணப்பதாரர்களுக்கு கட்டடைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், கணக்காய்வு திகதி வரையிலும் இந்த பதவிக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) சான்றிதழ் பத்திர கிளை**

சான்றிதழ் பத்திர கிளையினால் 1992 ஆம் ஆண்டு முதல் நடாத்தப்பட்டிருந்த பரீட்சைகளின் பெறுபேறுகளை கணனி கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், 1992 இற்கு முன்னர் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள் கணனி கட்டமைப்பினுள் உட்புகுத்தப்பட்டிராமையால் இலகுவாகவும், விரைவாகவும் அந்த பெறுபேறுகளை சான்றுறுதிப்படுத்துவதோ அல்லது பெறுபேறுகளை வெளியிடுவதோ சிரமமானதாக இருந்தது.

## 2.6 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 2,018 | 2,014 | 14 | 0.69 |
| | மூலதனம் | 188 | 49 | 130 | 69.10 |
| | மொத்தம் | 2,206 | 2,063 | 144 | 6.52 |
| **2014** | மீண்டுவருபவை | 2,493 | 2,491 | 2 | 0.08 |
| | மூலதனம் | 211 | 155 | 56 | 26.50 |
| | மொத்தம் | 2,704 | 2,646 | 58 | 2.14 |
| **2015** | மீண்டுவருபவை | 3,030 | 2,980 | 50 | 1.65 |
| | மூலதனம் | 166 | 42 | 124 | 0.60 |
| | மொத்தம் | 3,196 | 3,022 | 174 | 5.44 |
| **2016** | மீண்டுவருபவை | 2,925 | 2,894 | 31 | 1.05 |
| | மூலதனம் | 335 | 287 | 48 | 14.32 |
| | மொத்தம் | 3,260 | 3,181 | 79 | 2.42 |
| **2017** | மீண்டுவருபவை | 3,108 | 2,864 | 244 | 7.85 |
| | மூலதனம் | 783 | 147 | 636 | 8.12 |
| | மொத்தம் | 3,891 | 3,011 | 880 | 22.61 |

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

**ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 செலவின விடயங்களுக்குரியதாக ஆண்டினுள் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு செலவிடப்படாமையால் 32 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தன.

(ஆ) 212-2-1-0-1404 இலக்க செலவின விடயத்திற்காக ரூபா 1,000,000 ஆரம்ப நிதியேற்பாடொன்று ஒதுக்கப்பட்டிருந்ததுடன், ஆண்டினுள் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் அந்த நிதியேற்பாட்டிலிருந்து ரூபா 700,000 தொகையான பணம் மற்றுமொரு செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டுள்ள போது, தேறிய நிதியேற்பாட்டில் 23 சதவீதம் எஞ்சியிருந்தது.

**2.7 மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டிற்காக வருமான குறியீடு 20.03.02.13 ஆம் இலக்கத்தின் கீழ் ரூபா 420 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டினுள் ரூபா 413 மில்லியன் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 98 சதவீதமாக இருந்தது. இந்த வருமான கணக்கு தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களம் பரீட்சைகளை நடாத்துவதற்காக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட வருமானங்கள் மீளாய்வாண்டின் யூன் மாதம் வரையிலும் 20.03.02.13 ஆம் இலக்க பரீட்சைகள் திணைக்களத்தின் வருமானத் தலைப்பிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், யூலை மாதம் முதுல் திசெம்பர் மாதம் வரையிலும் கிடைத்திருந்த ரூபா 50,392,882 தொகையான வருமானம் 20.03.99.00 ஆம் இலக்க வருமானக் குறியீடு கொண்ட அரசின் ஏனைய பெறுவனவுகள் வருமான தலைப்பிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய வருடங்களில் பரீட்சைகளை நடாத்தியமைக்காக அறவிடப்பட வேண்டிய வருமானங்களின் ரூபா 2,513,345 தொகை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது.

**2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 20201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 35 | 34.9 | 20 | 20.2 | 100 | 79 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவையாக இருந்த கடன் மீதிகளை அறவீடு செய்யாமை**

**(அ) பணிநீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள்**

(i) 2013 சனவரி முதல் பணி நீக்கத்திற்கு உள்ளாகியிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ரூபா 443,320 தொகையான கடன் மீதியினை அறவீடு செய்வதற்காக அவருக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2018 யூன் மாதம் வரையிலும் அந்த விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 2009 யூலை 01 ஆந் திகதி முதல் பணி நீக்கத்திற்கு உள்ளாகியிருந்த மற்றுமொரு உத்தியோகத்தரிடமிருந்து 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 33,047 தொகையான தீர்க்கப்படாத கடன் மீதியொன்று நிலவியதுடன், பணி நீக்கம் செய்யப்பட்ட திகதியிலிருந்து 8 ½ வருட காலப்பகுதியினுள் ரூபா 8000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**(ஆ) சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன்கள்**

1995 முதல் 2008 வரையான காலப்பகுதியினுள் சேவையை கைவிட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 115,351 தொகையான கடன் மீதிகளை மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.9 கட்டுநிதிக் கணக்கு**

செலவின எல்லையை மிகைத்து கட்டுநிதி பெறப்பட்டமையின் காரணமாக மாத இறுதியில் பெருந் தொகையான கட்டுநிதி எல்லை சேமிப்புக்களை காணக்கூடியதாக இருந்ததுடன், செலவினங்களை உரிய முறையில் முகாமை செய்யாமை மற்றும் பாதீட்டு கட்டுப்பாட்டினை உரிய முறையில் பேணிச் செல்லாமை போன்றன இவ்வாறு கட்டுநிதி சேமிக்கப்படுகின்றமைக்கு காரணமாக அமைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு.

| மாதம் | ஆரம்ப மீதி | கட்டுநிதி பெறுவனவு | ஏனைய பெறுவனவுகள் | கொடுப்பனவு | சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| சனவரி | - | 123,700,000 | 20,711,632 | 142,924,300 | 1,487,332 |
| பெப்ரவரி | 1,487,332 | 120,325,000 | 12,503,097 | 124,025,413 | 10,290,016 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மார்ச் | 10,290,016 | 697,250,000 | 20,286,257 | 679,749,885 | 48,076,388 |
| ஏப்ரல் | 48,076,388 | 32,000,000 | 7,855,801 | 72,997,236 | 14,934,953 |
| மே | 14,934,953 | 130,000,000 | 12,908,859 | 156,843,254 | 1,600,558 |
| யூன் | 1,600,558 | 71,000,000 | 13,505,989 | 81,201,668 | 4,904,879 |
| யூலை | 4,904,879 | 145,000,000 | 9,661,074 | 156,637,630 | 2,928,323 |
| ஆகஸ்ட் | 2,928,323 | 81,000,000 | 16,768,825 | 98,385,453 | 2,311,715 |
| செப்தெம்பர் | 2,311,715 | 178,500,000 | 13,724,318 | 172,282,413 | 22,253,620 |
| ஒக்தோபர் | 22,253,620 | 586,500,000 | 495,221,887 | 651,605,161 | 452,370,346 |
| நவம்பர் | 452,370,346 | 296,500,000 | 14,804,434 | 311,714,433 | 451,960,341 |

### 2.10 இணக்கமின்மைகள்

### 2.10.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 142(1)(2) | - | அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய பணம் அல்லது அந்த பணத்தை அறவீடு செய்தல் தொடர்பான குறித்துரைக்கப்பட்டு நிச்சயிக்கப்பட வேண்டியதுடன், அந்தப் பணம் தீர்வையாகும் வரையிலும், அவ்வாறானதொரு சேவையொன்றினையோ வழங்கலையோ மேற்கொள்ளக்கூடாத போதிலும், நிறுவன பரீட்சைகளை நடாத்தி பெறுபேறுகளை வெளியிட்டதன் பின் நிறுவன பரீட்சைகளை நடாத்துவதற்கான கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தன. |
| (ii) நிதிப்பிரமாணம் 177(1) | 55,604,862 | சேகரிக்கப்படும் பணம் நாள்தோறும் அல்லது கூடியளவு விரைவாக வங்கியில் வைப்பிலிடப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்திற்கு வெளிவாரி நிறுவனமொன்றினால் அனுப்பப்பட்ட 173 காசோலைகள் 02 முதல் 15 நாட்கள் வரையான காலம் தாழ்த்தப்பட்டு வங்கியிலிடப்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 1,869,714 | 02 வங்கிக் கணக்குகளுக்குரிய வழங்கப்பட்டு வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்த 465 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2008 யூன் 09 ஆந் திகதிய PF/PS/Audit T38 ஆம் இலக்க அரச நிதி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | 515,624 | இனங்காணப்படாத வரவு மற்றும் செலவு மீதிகள் உடனடியாக இனங்காணப்பட்டு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2016 ஒக்தோபர் மாதம் முதல் 2017 நவம்பர் மாதம் வரையிலும் இனங்காணப்படாத வரவு மற்றும் செலவு மீதிகள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.10.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

---

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காத வகையில் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

**உழைக்கும் போதே செலுத்தும் வரி**

---

(அ) தேசிய வருமான வரி ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 2015 யூலை 06 ஆந் திகதிய SEC/2015/05 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய 2017 சனவரி முதல் யூன் வரையிலும் பரீட்சைத் திணைக்களத்தின் 56 உத்தியோகத்தர்களுக்கான உழைக்கும் போதே செலுத்தும் வரியினை கணிப்பீடு செய்யும் போது ரூபா 859,673 தொகை குறைத்துக் கணப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், இதன் காரணமாக அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானம் அந்த அளவினால் குறைவடைந்திருந்தது.

(ஆ) 56 உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் ரூபா 62,500 இனை மிகைத்து வருமானம் உழைக்கப்படுவதாக அவதானிக்கப்பட்டதுடன், அந்த உத்தியோகத்தர்களால் 2017 சனவரி முதல் யூன் வர உழைக்கப்பட்ட ரூபா 12,041,570 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் கவனத்திற் கொள்ளப்படாது, உழைக்கும் நிலையான மாதாந்த சம்பள மாத்திரம் கவனத்திற் கொள்ளப்பட்டு வரி கணிப்பிடப்பட்டிருந்தது.

(இ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் நாயகம் (வரிக் கொள்கை, சட்டம் மற்றும் சர்வதேச அலுவல்கள்) மற்றும் தலைவரின் (அர்த்தம் கற்பிக்கும் குழு) 2012 திசெம்பர் 13 ஆந் திகதிய IC/2012/49 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பரீட்சைகள் திணைக்களத்தின் கடமைகள், அவசர, முன்னுரிமை சேவைகள் அல்லது விசேட பணிகளுக்காக மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவொன்றாக கருதி SEC/2011/504(IX) பிரிவின் கீழ் வரியிலிருந்து விலக்களிக்க முடியாது எனவும், பரீட்சைகள் திணைக்களத்தின் கொடுப்பனவு செலுத்தப்படும் கடமைகள் பரீட்சைகள் திணைக்களத்தின் நாளாந்த மற்றும் சாதாரண பணிகளானாமையால் அவற்றில் உழைக்கும் போதே செலுத்தும் வரிக்கு உள்ளாகுமெனவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் திணைக்களத்தினால் அந்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் படிகளை கவனத்தில் கொள்ளப்பட்டு உழைக்கும் போதே செலுத்தும் வரி கணிப்பிடப்பட்டமை கணக்காய்விற்கு சிக்கலுக்குரியதாக இருந்தது.

(ஈ) வருமான வரி ஆணையாளர் நாயகத்தின் 2015 யூலை 06 ஆந் திகதிய SEC/2015/05 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3(II) ஆம் பந்திக்கமைய எரிபொருள் படிகளும் வரிக்குட்படும் எனினும், சம்பள இலக்கம் 15 கொண்ட உத்தியோகத்தரின் உழைக்கும் போதே செலுத்தும் வரியினை கணிப்பீடு செய்யும் போது சனவரி முதல் யூன் வரையிலும் ரூபா 96,900 தொகையான எரிபொருள் படிகள் வரியிலிருந்து விலக்களிக்கப்படும் வருமானமொன்றாக கவனத்திற் கொண்டு உழைக்கும் போதே செலுத்தும் வரி கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

**2.11 மனிதவள முகாமைத்துவம்**

**2.11.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு**

பரீட்சைகள் திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 303.3 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு நபருக்கான செலவு ரூபா 494,075 ஆக இருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளில் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 85 | 76 | 09 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 18 | 10 | 08 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 407 | 319 | 88 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 164 | 153 | 11 | - |
| (v) | அமைய/ஒப்பந்தம் | - | 56 | - | 56 |
| | மொத்தம் | 674 | 614 | 116 | 56 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தின் பதவியணி தேவைப்பாடு தற்காலத்திற்கு பொருந்தும் வகையில் திணைக்களத்தினால் தீர்மானிக்கப்பட்டு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், பரீட்சைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 2000 ஆம் ஆண்டின் தேவைப்பாட்டிற்கமைய தயாரிக்கப்பட்டதென்பது அவதானிக்கப்பட்டது.

(ii) 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில், அரச முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் 80 இனையும், 45 தொடர்பாடல் உதவியாளர் பதவிகளையும், 85 அலுவலக உதவியாளர் பதவிகளினயும் அதிகரிக்கப்பட வேண்டும் என இனங்காணப்பட்டிருந்த போதிலும், அதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டு அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) முறையான அங்கீகாரமின்றி அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை மிகைத்து 56 ஊழியர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

(iv) திணைக்களத்தின் வேலைகளை செயற்திறனுடன் நிறைவேற்றுவதற்கும், உள்ளகக் கட்டுப்பாட்டினை பயன்படுத்துவதற்கும் திணைக்களத்தின் கிளைகளுக்கிடையே உள்ளக இடமாற்றங்கள் ஆகக் குறைந்தது 05 வருடங்களுக்கு ஒரு தடவையாவது மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ஒரே கிளையினுள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சேவையில் ஈடுபட்டுள்ள 23 உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.